செ.வெ.எண்: 38/2021 நாள்: 18.09.2021

# மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெருமாள்பாளையம் மற்றும் ஆறுதொழுவு ஊராட்சிகளில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (18.09.2021) திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்பாளையம் மற்றும் ஆறுதொழுவு ஊராட்சிகளில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, திருப்பூர் மாவட்டத்தில் 31,000 மனுக்கள் தீர்வு காணப்பட்டு பொதுமக்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய் பெருந்தொற்று காலத்தில் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்ற வகையிலே, தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டு தவணையாக 2 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 4 ஆயிரம் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

அதே போல், வேளாண்பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும், வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காகவும் விவசாயிகளின் எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் அதற்குத் தீர்வு காண்பதற்காக வேளாண்மைத்துறைக்கென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனத்துறை எனும் ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கென்று தனி ஒரு நிதி நிலை அறிக்கையை வெளியிட்டார்.

இன்றைய தினம், திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட முதலிபாளையம், தாயம்பாளையம், கருக்கம்பாளையம், புளியம்பட்டி, பெருமாள்பாளையம், துலுக்கன்வலசு, வாணவராயன் நல்லூர், முதலிபாளையம் காலனி மற்றும் கொத்தனூர் கிராமங்களில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய் மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் வேண்டி பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, ஆறுதொழுவு ஊராட்சிக்குட்பட்ட வேலாயுதம்பாளையம், ஆறுதொழுவு, மாலைக்காட்டுப்புதூர், சேடம்புதூர், காளிபாளையம், தேவனம்பாளையம் மற்றும் சுண்ணாம்பு மேடு கிராமங்களில் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய் மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் வேண்டி பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்களுக்கு வழங்கி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அய்யச்சாமி, காங்கேயம் மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.முருகேன், காங்கேயம் வட்டாட்சியர் திருமதி.சிவகாமி, குடிநீர் வடிகால் வாரிய உதவி பொறியாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**